இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பள்ளிக் கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2018/2019
இறுதிப் பரீட்சை – 2020
**EPC2419/ESC2219/EPA2419: முன்பிள்ளைப் பருவத்தில் விளையாட்டு**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் எவையேனும் மூன்று (03) வினாக்களும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

| திகதி: 19.07.2020 | நேரம்:பி.ப.01.30 – பி.ப.4.30 |
|---|---|

## பகுதி – I

1. இளம் பிள்ளைகளுக்கு விளையாட்டின் முக்கியத்துவம் பற்றி சுருக்கமாக விளக்குக.

2. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு விளையாட்டுப் பற்றிய பியாஜேயின் கொள்கையை சுருக்கமாக விளக்குக.

3. இளம் பிள்ளைக்கான விளையாட்டின் நோக்கங்கள் இரண்டினை எழுதுக.

4. சிறுவர் விளையாட்டுச் செயற்பாடுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

5. வெளிப்புற விளையாட்டு என்பதனால் கருதப்படுவது யாது?

6. விளையாட்டின் இயல்புகள் இரண்டினை எழுதுக.

7. இளம் பிள்ளைகளுக்கு விளையாட்டினூடாக ஆராய்தலில் விருத்தியாகும் **நான்கு(4)** திறன்களைக் குறிப்பிடுக.

8. உருவாக்க விளையாட்டின் மூலம் இளம் பிள்ளைகளுக்கு கிடைக்கும் நன்மைகள் **மூன்றினை** (3) எழுதுக.

**(8 x 5 = 40புள்ளிகள்)**

00038

# பகுதி – II

9. i. இளம் பிள்ளைகளுக்கு பொருத்தமான **ஐந்து (5)** வகையான விளையாட்டுச் செயற்பாடுகளைப் பெயரிடுக.

**(10 புள்ளிகள்)**

ii. மேலே நீங்கள் குறிப்பிட்ட வகைகள் ஏதாவது **இரண்டினை (2)** தெரிவு செய்து அவற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் ஒப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

10. i. பிள்ளைகளை குழுக்களாக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **மூன்றினை (3)** சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. **'விளையாட்டு கலாசாரத்தின் செல்வாக்குக்கு உட்பட்டது'** பொருத்தமான உதாரணங்களுடன் இக்கூற்றினை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. i. 4 தொடக்கம் 5 வயது வரையான வயதுக் குழுக்களுக்கு பொருத்தமான விளையாட்டுச் செயற்பாடுகளை பட்டியலிடுக.

**(8 புள்ளிகள்)**

ii. மேலே நீங்கள் குறிப்பிட்ட செயற்பாடுகள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து அது எவ்வாறு பிள்ளைகளின் மொழித்திறன் விருத்திக்கு உதவுகின்றது என விளக்குக.

**(12 புள்ளிகள்)**

12. **'எமது உறவினர்கள்'** என்ற தலைப்பானது உங்களது முன்பள்ளியில் கற்பித்தலுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது எனக் கொள்க.

மேற்படி கருப்பொருளுக்கு அமைவாக பாடமொன்றினை பின்வரும் தலைப்புகளில் திட்டமிடுக.

i. பாடநோக்கம்.

ii. வயதுக் குழு.

iii. பாடப்பரப்பு.

iv. ஒதுக்கப்பட்ட நேரம்.

v. தெரிவு செய்யப்பட்ட இரண்டு விளையாட்டு முறைகள்.

vi. கற்பித்தல் சாதனங்கள்.

vii. கற்பித்தல் முறைகள்.

viii. கணிப்பீடு.

**(20 புள்ளிகள்)**

13. i. இளம் பிள்ளைகளுக்கு ஒன்றிணைந்த பாடவிதானத்தில் பாடத்தை திட்டமிட்டு அமுல்படுத்துவதில் முன்பள்ளி ஆசிரியரின் வகிபங்கினை குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

ii. முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு கற்றல் அனுபவங்களை வழங்குவதில் பெற்றோரின் பங்களிப்பினை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**